# THE IMPORTANCE OF REMEDIAL TEACHING FOR EDUCATIONAL ACHIEVEMENT IN PRIMARY EDUCATION STUDENTS

Mr. Sivaselvam Arulnesan[1], Mr. Shandru Mariyadas[2]
[2]Lecturer, Department of Education and Childcare, Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka[2]
chandrumariyadas@yahoo.com

**Abstract**

The education level of the elementary school students should have a great foundation. If this is prevented or minimized, the teacher and traveling together in a student teaching activity can bring a drastic change in the student progress. The classroom teaching system plays an important role in today's learning and teaching activities. It should have to be noted that much of this depends on the unique characteristics of the teacher. It's important to understand that no matter how much instructional equipment, school or administrative quality is found, the academic value available to the students depends on it. It also points to the need for greater change in teaching methods. The author has the important task of producing the changes. One of the things that is proposed for this is how to improve the efficient learning of students by teaching techniques, it is also important for the teacher to be aware of how to improve. In addition, teaching helps the student develop his/her skills, attitudes, knowledge and values. The survey shows that five out of the 16 Tamil schools in Balangoda area, which include many such subjects, include elementary schools and the teachers can help their students make better behavioral changes through teaching. The teacher also seems to have a lot of knowledge about the subject, teaching methods and psychological thinking. Even though the above activities are under taken certain amount of students will be found as a setback. Teachers and parents owe them a duty to remedy this. Therefore, this study has been put in place to provide the best learning level for the elementary school students and to provide them with remedial learning.

**Keywords:** Education, Primary

## 1.1 அறிமுகம்

இன்றைய நிலையில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் காரணமாக சமூகமும், சமூகம் சார்ந்த நிறுவனங்களும் துரித கதியில் இயங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. எனவே இவ்வாறான மாற்றங்களை செயற்படுத்தும் வகையில் பாடசாலைகள் சிறந்த மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கற்றல் முறையானது வினைத்திறன்ன மிக்கதாகக் காணப்பட்டால் பிள்ளையானது தன்னைச் சூழவுள்ள உலகை நன்கு பயன்படுத்த முடியும். கற்பித்தலின் மூலாதாரம் ஆசிரியருக்கும் கற்போனுக்குமிடையேயான இடைத்தொடர்பாகும்.இந்த கற்றல் முறையை ஆரம்பக் கல்வியிலே பிள்ளையானது சிறந்த முறையில் வளர்த்துக் கொள்ளும் போதே பிள்ளையின் தொடர்கல்விக்கான கற்றல் செயற்பாடுகளை திறம்பட முன்னெடுத்துச் செல்ல முடியும். இதற்கமைய பலாங்கொடை பிரதேசத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்டு ஆரம்பபிரிவு மாணவர்களது கற்றல் செயற்பாடுகளில் பூரண விருத்தி இடம்பெறாமல் உள்ளமை பாரிய பிரச்சினையாக உள்ளது. இப்பிரச்சினைக்கான தீர்வுகளைப் பெறும் வகையில் ஆசிரியரின் பங்களிப்புகள் அமைந்துள்ளன. எனவே இத்தகைய பிரச்சினையை மையமாகக் கொண்டு இப்பிரதேசத்தின் Type III 05 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பிரச்சினை தீர்த்தல் முறை செயற்றிட்ட முறை, மொண்டிசூரி முறை சிறுவர் பூங்கா முறை, அவதானித்தல், விரிவுரை முறை போன்ற கற்றல் - கற்பித்தல் முறைகள் பிரபலமான முறைகளாக விளங்குகின்றன. எனினும் இவற்றைவிட பல்தரக் கற்பித்தல், குழுக்களாக கற்பித்தல், பல்மட்டக் கற்பித்தல் போன்ற விசேட கற்றல் - கற்பித்தல் முறைகளும் காணப்படுகின்றன. இவை விசேட சந்தர்ப்பங்களிலும் விசேட தேவைகளுக்கும் பயன்படுத்துவையாகும்.எனவே இவ்வாய்வானது "மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் முறையின் அவசியமும் அதன் தாக்கமும்" என்கின்ற தலைப்பைக் கொண்டு அமையப்பெற்றுள்ளது.

## 1.2 ஆய்வுப் பின்னணி

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மத்தியில் இப்பிரதேச மக்களது குடும்ப சூழ்நிலையை நோக்குகின்றபோது பெரும்பாலான பெற்றோர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவும் காணப்படுவதோடு பின்னடைந்த பொருளாதார நிலை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றமை பிள்ளையின் கற்றல் நடவடிக்கைகளைப் பாதிப்பதாக அமைவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குடும்பத்தில் காணப்படுகின்றபல்வேறுபட்ட பிரச்சினைகள் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது எனலாம். மேலும் பெற்றோர் இடைநிலை மாணவர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட குறைவாகவே ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு அளிக்கின்றனர். இப்பாடசாலைகளை அவதானித்த போது பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் குறைவு, வளப்பற்றாக்குறை, தனியார் வேறுபாடுகளைக் கண்டறிந்து கொள்ளாத ஆசிரியர்கள் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பின்மை, ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளின் பெற்றோர்களுக்குமான தொடர்பு குறைவு, மாணவர்களின் இடைவிலகல், மாணவர் வரவுக் குறைவு, கற்றலில் ஆர்வமில்லாத மாணவர்கள் போன்ற காரணங்கள் இம்மாணவர்களின் கற்றலில் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. இத்தகைய பின்னணி ஆய்வுக்கு உட்படுத்திய மாணவர்களிடையே கற்றல் விருத்திக்கு தடையாக அமைந்துள்ளது என்பது இனங்காணப்பட்டுள்ளது. எனவே தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தின் பாடசாலை மட்டங்களில் மெல்லக் கற்கும் மாணவர்கள் தொகை அதிகரித்து காணப்படுவதோடு இம்மாணவர்களின் மொழித்திறன், கற்றல் - கற்பித்தல் மற்றும் பரிகார முறை சார்ந்த விடயங்களை விருத்தி செய்யும் முகமாகவும் தேசிய மற்றும் பாடசாலையின் இலக்குகளை அடையும் முகமாகவும் இத்தலைப்பு தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.3 ஆய்வுப் பிரச்சினை

ஆரம்பக் கல்வி மாணவர்களில் அறிவு நிலை சார்ந்த கற்றல் - கற்பித்தல் முறை அவசியமாகின்றது. பிரதேச மட்டத்தில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் காணப்படுகின்ற பின்னடைவு தொடர்ந்து காணப்படுகின்றது. இவை பல்வேறு காரணங்களை அடிப்படையாக கொண்டு நிகழ்ந்து வருகின்றது. அதாவது நான் ஆய்வுக்காக தெரிவு செய்த பிரதேசத்தின் சமூக, பொருளாதார நிலமை பின்தங்கியதாகக் காணப்படுகின்றது. அத்துடன் கல்வி வளர்ச்சியும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது. இதனால் கல்விக்கான முக்கியத்துவம் குறைவாகவே உள்ளது. இருப்பினும் அச்சமூகத்தை முன்னேற்ற வேண்டுமாயின் கல்வி நிலை உயர்வடைய வேண்டும். மேலும் இப்பிரதேச பாடசாலைகளில் மாணவர்களிடம் எழுத்தறிவின்மை, வாசிப்புத்திறன் குறைவாகக் காணப்படல் பாடங்களை செவிசாய்க்கும் திறன் குறைவு, பேச்சுத் திறனில் சிக்கல்கள் போன்ற கற்றல் சார்பான பிரச்சினைகள் பல்வேறு காரணங்களின் நிமித்தம் ஏற்படுகின்றன. அதாவது கற்றலில் இடர்பாடு, கற்றலில் ஆர்வமின்மை, மாணவர் வரவு குறைவு, நுண்மதி குறைவாகக் காணப்படல், பொருளாதார பிரச்சினைகள், சகபாடிகளின் முறையான வழிநடத்தல்கள், கற்றல் பின்னடைவு போன்ற காரணங்களைக் கூறக் கூடியதாக உள்ளது. இவற்றை பரிகார கற்பித்தல் சார்ந்த வகையில் தீர்த்துக் கொள்வதற்கு ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.

மெல்லக் கற்கும் மாணவர்கள் தமது பாட அலகுகளில் இழந்தவற்றை கற்பதற்கு உதவும் செயற்பாடானது பரிகாரக் கற்பித்தல்முறை எனப் பொதுவாகக் குறிப்பிட முடியும். மாணவர்கள் சுகவீனம், பொருளாதார பிரச்சினைகள், மறதி, தாழ்வுமனப்பாண்மை போன்ற பல்வேறு காரணங்களால் தமது கற்றல் நடவடிக்கைகளில் ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் ஈடுபட முடியாத நிலை ஏற்படுகின்றது. இவர்கள் தமது வகுப்புக்குரிய கலைத்திட்டத்தில் உள்ள விடயங்களில் இடையிடையே சில விடயங்களை இழக்கின்றனர். இவ்வாறு இடையில் இழக்கப்படும் விடயங்கள் தொடர்ச்சியாக இவர்கள் கற்கப் போகும் விடயங்களுக்கு அவசியமானவையாக இருக்கலாம். இதனால் இம்மாணவர்கள் தமது தொடர்ச்சியான கற்றலில் இடர்பாடுகளை எதிர்க்கொள்கின்றனர்.

ஆரம்ப வகுப்பில் மொழிப் பாடத்தில் வாசிப்பதற்கு பிள்ளைகளுக்கு கற்பிக்கும் தருணத்தில் பாடசாலைக்கு சமூகமளிக்காத பிள்ளை, தொடர்ந்து மொழிப் பாடத்தை மட்டுமல்லாது சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், சமயம், கணிதம், போன்ற பாடங்களைக் கற்பதிலும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றது. இவ்வாறே பாடசாலை மாணவர்களின்ன கணித பாடத்தில் எண்களைக் (குறியீடு, எண்பெயர், எண் பருமன்) கற்பிக்கும் போது பாடசாலைக்குச் செல்லாத பிள்ளையால் அதன் பின்னர் கற்பிக்கப்படும் கணிதச் செய்கைகளான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பவற்றை பரிந்து கொள்ள முடியாதிருக்கும். இதனைப் போலவே மற்றைய பாடங்களிலும் பிள்ளைகள் பல்வேறு முக்கிய விடயங்களை இழந்து தொடர்ச்சியான கற்றலில் ஈடுபட முடியாதுள்ளது. மாணவர்களுக்கு தமது கற்றலில் உள்ள இடர்பாடுகளைக் களைந்து தொடர்ச்சியான கற்றலில் ஈடுபடுவதற்கு துணை செய்யும் பரிகாரக் கற்பித்தலானது உள்ளடக்கத்தை விடவும் திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. பரிகாரக் கற்பித்தல் பிள்ளைகளின் பார்வைக் குறைப்பாடு, புலக்காட்சி ஒழுங்கமைப்பு, அரூப காரணம் காட்டுதல், ஒலியை இனங்காணல், கணிதச் செயற்பாடுகள், கவனக் குறைவு, முதல் எழுத்தைக் கொண்டு வாசித்தல், செவிப்புலக் குறைபாடு போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

மேலும், பாடசாலை அமைந்துள்ள சமூகத்திற்கேற்ப பாடசாலையும் ஆசிரியரும் இசைவாக்கமடைவதால் இவ் ஆசிரியர்களும் ஒழுங்கான முறையில் மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளை திருத்திக் கொடுக்காமை, சரியான பின்னூட்டல்களை வழங்காமை, மாணவரைக் கவரக்கூடிய வகையில் திட்டமிட்ட வகையில் சிறந்த கற்றல், கற்பித்தலை முன்னெடுக்காமை. அத்துடன் ஆசிரியர்களுக்கான பயிற்சி, உளவியலறிவு என்பன குறைவாக காணப்படுகின்றமை, ஆசிரியர்கள் தூர இடத்தில் இருந்து வருகை தருவது, அத்துடன் ஆசிரியர் மாணவருடனான தொடர்பாடல் சிறந்த முறையில் அமையாமை போன்ற ஆசிரியர்கள் சார்பான பிரச்சினைகள்

காரணமாகவும் மாணவர்களுக்கு சிறந்த கற்றலை மேற்கொள்வதில் பிரச்சினை காணப்படுகின்றன. பரிகாரக் கற்பித்தல் தேவைப்படும் மாணவர்கள் பெரும்பாலும் சராசரி மட்டத்திலும் குறைவானவர்களாகவே காணப்படுவர். இதற்கான காரணமாக அமைவது குறித்த கற்றல்சார் அல்லது நடத்தைசார் பிரச்சினைகள், இடர்பாடுகள் ஆகும். பரிகாரக் கற்பித்தலை கல்வியில் சராசரி மட்டத்திலும் கூடிய மட்டத்தில் உள்ள மாணவர்களுக்கும் மேற்கொள்ள முடியும். இந்த மாணவர்கள் மேலதிக கவனிப்புடன் கற்றலில் ஈடுபடுவார்கள்.

### 1.4 ஆய்வு நியாயம்

ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தப்பட வேண்டும். பரிகாரக் கற்பித்தலின் உத்திகளை ஊக்குவிக்க வேண்டும். பாடசாலைகளில் மாணவர்களுக்கு முறையான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் சிறந்த மொழித்திறன், எழுத்து திறன், வாசிப்பு சார்ந்த சிறந்த அடைவு மட்டங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். பெற்றோர்கள் பிள்ளையின்பால் அக்கறை அற்று இருப்பதோடு கூடிய கவனம் இல்லாமல் இருக்கின்றனர். ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவம் பற்றி அறியாமல் ஏனைய நிலை மாணவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். ஆசிரியர்கள், மாணவர்கள் கொண்டுள்ள தொடர்பு சேய்மையானதாக காணப்படுவதோடு பெற்றோர்களுடனான சந்திப்பும் ஆசிரியர்கள் மத்தியில் குறைவாகவே காணப்படுகின்றது.

### 1.5 ஆய்வின் நோக்கம்

**பொது நோக்கம்**

ஆரம்ப பிரிவு மாணவர்களின் கற்றல்சார் அடைவு மட்டத்தில் பரிகாரக் கற்பித்தலின் அவசியத்தை உணர்த்துதல்

**சிறப்பு நோக்கம்**

1. ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் உள்ள தவறுகளை இனங்கண்டு அறிதல்.
2. பாடசாலைகளில் பரிகாரக் கற்பித்தல் இடம்பெறுமாற்றினை மதிப்பீடு செய்தல்
3. பரிகாரக் கற்பித்தலுக்கும் பின்தங்கிய மாணவர்களின் அடைவு மட்டத்திற்கும் இடையே உள்ள தொடர்பை வெளிக்கொண்டு வருதல்.
4. பெற்றோர்களுக்கு பரிகார கற்பித்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

### 1.6 திறவுச் சொற்கள் (key words)

ஆரம்பக்கல்வி மாணவர்கள்,கற்றல்சார் அடைவுமட்டம், பரிகாரக் கற்பித்தல்

### 2.0 இலக்கிய மீளாய்வு

ஒரு பிள்ளை பிறந்து பெற்றோரினதும் உற்றார் உறவினரதும் அரவணைப்பிலும் அன்புத் தொடர்பிலும் சுதந்திரமாக வளர்ந்து சுமார் ஐந்து வருடங்கள் கழித்து தனக்கு முற்றிலும் பழக்கப்படாத புதிய சூழலைக் கொண்ட பாடசாலைக்குள் பிரவேசிக்கின்றது. இவ்வாறு பல்வேறு சூழல்களில் வாழ்ந்து பழக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பிள்ளைகள் சுமூகமான திட்டமிடப்பட்ட ஒரு சூழலில் ஒன்றிணைகின்றனர். இவர்கள் பிற்காலத்தில் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கேற்ற வகையில் சமூகமயப்படுத்த வேண்டிய பொறுப்பை ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் கொண்டுள்ளனர். தம்மிடம் ஒப்படைக்கும் பச்சைக்கிளிளைப் பயனுள்ள பாத்திரங்களாகப் படைப்பதும் மண்ணாங்கட்டியாகப் பாழாக்கி விடுவதும் படைப்பாளியின் ஆற்றலைப் பொறுத்தது. பிள்ளைகளிடத்திலே மறைந்து கிடக்கின்ற உள்ளார்ந்த ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை வெளிக்கொணரவும், விருத்தி செய்யவும் வேண்டிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும். இந்த வகையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை எதிர்காலத் தலைவர்களாக மாற்றியமைக்கும் பொறுப்பு ஆசிரியருடையதாகும். (ஜெயமலர்.2003)

பாடசாலைக் கல்வியோடு தொடர்பான கல்விச் செயற்பாடுகள் யாவற்றிலும் ஆசிரியர் முக்கிய பங்குதாரராக விளங்குகிறார். “ஒரு நாட்டினுடைய தலையெழுத்து வகுப்பறையில் வடிவமைக்கப்படுகின்றது” என்பது

உண்மையானால் அதனை வடிவமைப்பதில் முக்கிய பங்குதாரராக ஆசிரியரே விளங்குகின்றார். இன்று ஆசிரியருடைய பொறுப்பு பாடத்துறை பொறுத்து கூர்மையாகக் காணப்பட்டாலும் தனியே பாட அறிவினை மட்டும் வழங்குபவராக அவர் திகழவில்லை. ஒரு ஆசிரியர் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை இனங்காண்பவராக அவை வெளிப்பட உதவுபவராக விஞ்ஞான ரீதியான அறிவு ஆராயும் மனப்பாங்கு நல்ல நாட்டங்கள் என்பவற்றை ஏற்படுத்துபவராக அல்லது அவற்றின் உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்குச் செலுத்துபராகத் திகழ்கின்றார். இதனடிப்படையில் ஒரு ஆசிரியர் சில பொதுவான பண்புகள் தகைமைகள் சில விசேட திறன்களும் உள்ளவராக இருத்தல் அவசியம். (அனுஷ்யா. 2008) கற்றலில் ஈடுபடுவதற்கு உதவுபவரை நாம் ஆசிரியர் என அழைக்கின்றோம். அதே போன்று மாணவர்களுக்கு பல்வேறு தகவல்களை கருத்துக்களை திறன்களை நுட்பங்களை முறையான ஒரு வழியில் செயற்படுபவர்களையும் ஆசிரியர் எனவும் அழைப்பதுண்டு. (பார்த்தீபன். 2005)

பாடசாலைக் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் இன்னொரு காரணி ஊக்கலாகும். மாணவர்கள் கற்றல் சார்ந்த விடயங்களில் ஈடுபடுவதற்கான காலம் மற்றும் சக்தி ஆகியவற்றை ஊக்கலே தீர்மானிக்கின்றது. ஊக்கலானது ஒரு தனியாள் சார்ந்த நிகழ்வாக இருந்தாலும் மாணவர்கள் பிற செயற்பாடுகளாலும் ஊக்குவிக்கப்படலாம். கற்றலுக்கான ஊக்குவிப்பு, கற்கும் விடயங்களை மாணவர்களின் அனுபவங்களுடன் இணைப்பதிலும் தங்கியுள்ளது. இவற்றோடு சமூகமயமாக்கப்படுதல், கற்கும் விடயங்களின் பொருத்தப்பாடு, கற்கும் விடயங்கள் சவாலாக இருத்தல், கற்பனையைத் தூண்டுதல் என்ற விடயங்கள் மூலமும் வகுப்பறையில் ஊக்கல் இடம்பெறுகின்றது. (மா.கருணாநிதி. 2008)

### 3.0 ஆய்வு முறைமையியல்

ஓர் ஆய்வின் போது தெரிவுசெய்யப்பட்ட பிரச்சினைகளை இனங்கண்டு அதற்குத் தேவையான தரவுகளைப்பெற பல ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே இவ்வாய்வினை வெற்றிகரமாக மேற்கொள்ள ஆய்வாளனால் ஆய்வுகருவிகள் ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**வினாகொத்து மூலம்**

இவ் ஆய்வில் வினாக்கொத்தினூடாக பெறப்படும் தரவுகள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் அமைந்து காணப்படுகின்றது. அந்த வகையில் ஆய்விற்கு தேவையான தகவல்களைப் பெறும் நோக்கில் இலகு எழுமாற்று மாதிரி மூலம் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் வினாகொத்துக்கள் வழங்கப்பட்டன. ஆய்வின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே வினாக்கள் தயாரிக்கப்பட்டன.

**நேர்முகங் காணல்**

நேர்முகங் காணல் மூலம் தேவைக்கு மேலதிகமாக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தகவலாளியின் அனுபவங்கள், உணர்வு பூர்வமான கருத்துக்கள் என்பன வெளிப்படும். வினாக்கொத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வினாக்களுக்கான விடை அவதானத்தின் போது கிடைக்கும். அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையின் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் மாணவர்களிடமும் ஆய்வாளனால் நேர்முகங்காணல் இடம் பெற்றது.

### 3.1 மாதிரித்தெரிவு

அந்தவகையில் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பலாங்கொடை கல்வி பிரிவில் 16 பாடசாலையில் எனது ஆய்வின் பொருட்டு 05 பாடசாலைகளைத் தெரிவு செய்துள்ளேன். இவ் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் பின்தங்கிய கிராம புறத்தில் இருப்பதனால், தூர இடங்களில் அமைந்து இருப்பதனாலும் போக்குவரத்துச் சிரமங்கள் காரணமாகவும் வசதி மாதிரி அடிப்படையில் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு,

அட்டவணை 3.2. ஆய்வுக்கான மாதிரிப்பாடசாலைகளின் விபரம்

| பாடசாலைகள் | வகை | ஆரம்பப்பிரிவு மாணவர்கள் | | ஆசிரியகள் | |
|---|---|---|---|---|---|
| | | தொகை | மாதிரி | தொகை | மாதிரி |
| **A** | III | 762 | 35 | 29 | 18 |
| **B** | III | 245 | 22 | 14 | 09 |
| **C** | III | 36 | 10 | 07 | 06 |
| **D** | III | 125 | 18 | 11 | 07 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| E | III | 144 | 15 | 10 | 05 |


(மூலம் : வலயக்கல்வி பணியகம்)

அந்த வகையில் பலாங்கொடை பிரதேசத்தில் வலேபொட மற்றும் மாரதென்ன, பலாங்கொடை பகுதியை மையப்படுத்தியதான 05 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அதில் 05 பாடசாலைகள் Type III பாடசாலைகளாகளாக தெரிவு செய்யப்பட்டன. இவை முறையே A,B,C,D,E, என குறிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலைகளில் இருந்து மொத்தமாக 05 அதிபர்களும் 45 ஆசிரியர்களும், மாணவர்கள் 5:1 என்ற மாதிரித் தெரிவின் அடிப்படையில் 100 மாணவர்களும், மாதிரிக்காக தெரிவு செய்யப்பட்டனர்.

**4.0 தரவுப் பகுப்பாய்வுகள்**

ஆய்வொன்றின் தரவுகளின் பகுப்பாய்வானது இன்றியமையாத ஒன்றாகும். தரவின் பகுப்பாய்வானது அனைத்து குடித்தொகையினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட மாதிரியில் இருந்து பெற்றுக் கொண்ட தரவுகளை முதலில் நோக்கங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி அவற்றைப் பின்பு தேவைகேற்ப வினாக்களை அமைத்து அளவு ரீதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான முறையில் புள்ளிவிபரங்களை பகுப்பாய்வு செய்யும் போது தரவுகளின் நம்பகத்தன்மைக்கு ஏற்ப ஆய்விற்காக முடிவினைப் பெற்றுக் கொண்டாலும் சிறந்த முடிவினை பெற முடியாதுள்ளது. இதனால் பகுபாய்வு என்பது சிறப்பான முறையிலும் ஆய்வாளரின் அறிவு பூர்வமான செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது. இதில் தரவுகள், தகவல்கள் அனைத்தும் அளவு ரீதியாகவும் பகுபாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறாக தரவுகளின் பகுப்பாய்வானது இவ்வாய்வில் சிறப்பான முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.


1. வாசிப்புத் திறன் ஆற்றல்களின் நிலை




உரு 4.1

மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் அவதானிப்பிலிருந்து அவர்களின் வாசிப்பு வீதத்தின் அடிப்படையில் வாசிக்க தெரியாதவர்கள் மிகவும் அதிகமானதாகவும் ஓரளவு வாசிக்க கூடிய மாணவர்களின் வீதம் குறைவானதாகவும் காணப்பட்டதை அவர்களிடம் பெற்றுக்கொண்ட தகவலின்படி அவதானிக்க முடிந்தது.


2. எழுத்துத் திறன் ஆற்றல்களின் நிலை




உரு.4.2

மாணவர்களின் எழுத்துத்திறன் பற்றி அவதானித்த போது சிறந்த அடைவுமட்டத்தினை 65 வீதமான மாணவர்கள் கொண்டிருந்ததோடு எழுத்து சார்ந்த அறிவு மட்டம் குறைந்த மாணவர்கள் குறிப்பிட்டளவினரே காணப்பட்டனர் என்பதை அவதானிக்க முடிந்தது.


3. கிரகித்தல் திறனில் ஏற்படும் இடர்பாடுகள்




உரு 4.3

ஆரம்பப்பிரிவு மாணவர்கள் தங்களின் எழுத்து, வாசிப்பு திறன் அடிப்படையில் கிரகித்தல் செயற்பாடானது முற்றிலும் மாறுபட்டு சிறந்த அடைவு மட்டத்தை கொண்டிருந்தது. அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி கிரகித்தல் ரீதியான பிரச்சினைகள் 05 வீதமானவர்களிடமே காணப்பட்டது.


4. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் ஆசிரியரின் கற்பித்தலின் பங்களிப்பு




உரு 4.4

மாணவர்களின் மத்தியில் பரிகாரக் கற்பித்தல் தொடர்பான ஆசிரியர்களின் பங்களிப்பு விடயங்களை மாணவர்களிடம் கேட்டறிந்தபோது ஆசிரியர்கள் முடியுமான வகையில் பங்களிப்பு செய்வதாகவும் குறிப்பிட்ட சில ஆசிரியர்களின் பங்களிப்பு குறைவானதாகவும் பரிகாரக்கற்பித்தல் தொடர்பான அறிவின்மையை இத்தரவின் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.


5. பரிகாரக்கற்பித்தலுக்கான நேரம் போதாமை




உரு 4.5

ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆசிரியர்களிடம் வினவப்பட்ட கேள்விகளுக்கு அமைவாக அவர்களின் கருத்தாக பரிகாரக் கற்பித்தல் சார்ந்த அறிவினை தாங்கள் கொண்டிருந்தாலும் அதனை முறையாக மேற்கொள்வதற்கு நேரம் போதாமை தொடர்பில் 80 வீதமானவர்கள் கருத்து தெரிவித்தனர். 10 வீதத்திற்குட்பட்டவர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் பரிகாரக்கற்பித்தலை மேற்கொள்ள முடியுமாக இருக்கின்றதென இவ்வாய்வு தரவின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது.


6. மேலதிக பரிகாரக் கற்பித்தல்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும் நிலை




உரு 4.6

ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கற்றல் அடைவ மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கான பரிகாரக்கற்றலின் தேவையறிந்து ஆசிரியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு ஆய்வு மூலம் மேலதிக பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டிய காணப்படுவதாகவும் அவை 55 வீதமானவர்களின் கருத்துக்களை சுட்டிக்காட்டுவதோடு 15 வீதமானவர்கள் மேலதிகமான செயற்பாடுகள்

7. பாடசாலைகளில் பரிகாரக்கற்பித்தல் முறைகள் திருப்திகரமாக உள்ள நிலை தொடர்பாக பெற்றோர்களின் கருத்து




உரு 4.7

பாடசாலையில் ஆரம்பக்கல்வி மாணவர்களின் பரிகாரக்கற்பித்தல் தொடர்பாக பெற்றோர்களிடம் வினவப்பட்ட கேள்வியின் போது அவர்களில் 75 வீதமானவர்கள் அது தொடர்பாக எதுவும் தெரியாது எனவும் 20 வீதமானமவர்கள் அது தொடர்பாக அறிந்திருப்பதோடு 05 வீதமானவர்கள் முழுமையாக திருப்தி கொள்வதாகவும் குறிப்பிட்டனர். இதன்மூலம் பாடசாலைகளில் பரிகாரக்கற்பித்தல் முறையானது முற்றிலும் தேவையானவொன்றாகவும் பெற்றோர்களுக்கு அது தொடர்பான அறிவு அவசியம் எனவும் இத்தரவின்மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### 5.0 தீர்வுகளும் ஆலோசனைகளும்

### 5.1 ஆசிரியர்களுக்கான ஆலோசனை

மாணவர்கள் குழு வேலைகளில் அல்லது தனி வேலைகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் அவர்களின் வேலைகளை அவதானித்தலின் மூலம் அவர்கள் எந்த விடயங்களில் இடர்படுகின்றனர் என்பதை அறிய முடியும். உதாரணமாக கணிதத்தில் பிரசினம் தீர்த்தலில் (வசனக் கணக்குகள்) ஈடுபட்டிருக்கும் போது அவர்கள் அதில் வாசித்தல், கிரகித்தல், நிலைமாற்றுதல், செய்கை, குறித்தல் ஆகிய படிகளில் இடர்படுகின்றனர் என அறி முடியும். பரிகார கற்பித்தல் தேவைப்படும் மாணவர்களை அவர்களுடைய வகுப்பறையில் ஆசிரியரால் பல்வேறு முறைகளால் இனங்காண முடியும்.

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுபவர் வகுப்பாசிரியராக இருக்கலாம் அல்லது பரிகாரக் கற்பித்தலில் அனுபவம் வாய்ந்த வேறோர் ஆசிரியர் பரிகாரம் வழங்குவதாக இருப்பின் அவருக்கு வகுப்பாசிரியர் மாணவனின் இடர்பாடுகள், குறைபாடுகள் பற்றிய தகவல்களை வழங்குதல் வேண்டும். பரிகாரக் கற்பித்தல் என்பது மீளக் கற்பித்தல் அல்ல. அது பிள்ளை இடர்ப்படும் விடயத்தை அவதானித்து அந்த இடர்பாட்டைத் தீர்த்தல் ஆகும்.

இவ்வாறான மாணவர்களுக்கு பரிகாரம் என்கிற பேரில் சில விடயங்கள் மாத்திரம் பேணப்படும். மதிப்பீட்டின்போது எதிர்பார்த்த அடைவினை அடைய மிகவும் கஷ்டப்படுவார்கள். இவர்கள் தொடர்ச்சியாக கற்றலில் இடர்பட்டு பரிகாரம் காணவேண்டிய நிலையிலிருந்தும் பரிகாரம் காணப்படாத நிலையில் அதிக கற்றல்சுமை காரணமாக பாடசாலைக் கல்வியை இடைநடுவில் விட்டுச்செலலச் கூடியவர்களாக மாறிவிடுவார்கள். இதனைத் தவிர்க்கும் முகமாக இவ்வாறான இடர்பாட்டினை நிவர்த்திக்கும் வகையில் பரிகாரமளிக்கின்றபோது சிறந்த பெறுபேற்றினை அடைந்து கொள்வார்கள் என்பது நடைமுறையில் கண்டறியப்பட்டுள்ள விடயமாகும்.

குறிப்பாக ஆரம்பக்கல்வியை கற்கின்ற மாணவர்களிலேதான் இவ்வாறான இடர்பாடுகள் அதிகளவில் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனெனில் பல்வேறு காரணிகள் கூறப்பட்டாலும் தற்காலத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தப்படுதல் என்கிற காரணியை முன்னிலைப்படுத்தி நன்றாகத் துலங்கக் கூடியவர்களை மாத்திரம் எடுத்து அவர்களையே இரவுபகல்பாராது பயிற்றுவிக்கப்படுவதனால் ஏனைய மாணவர்கள் அனைவருமே பின்னடைவானவர்கள் என்கிற மனப்பதிவு அந்த மாணவர்களிடம் ஏற்படுவதும் மாணவர்கள் கற்றலில் ஆர்வம் காண்பிப்பதில்லை. அதுமாத்திரமின்றி அந்த வகுப்பில் கற்பக்கின்ற ஆசிரியரும் ஏனோதானோ என்கின்ற நிலையில் காணப்படுவது அடுத்த காரணியாகும். இவர்களின் பெற்றோர்களும்

இவர்கள் குறைபாடுடையோர் என்கிற பதிலுடன் எதுவுமே பேசாது விட்டுவிடுவார்கள். இறுதியில் அந்த மாணவர்கள் இடைவிலகளுக்குள் ஆளாவர். சமூகத்தில் அவர்கள் பிரச்சினைக்குரியவர்களாக மாற்றம்கண்டு இறுதியில் சமூகவிரோதிகளாக மாறிவிடுவதையும் நாம் காண்கிறோம்.

ஆதால்தான் ஆரம்பத்திலிருந்தே அதற்கான பரிகாரங்களைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் ஆசிரியர்களிடத்தில் காணப்படுதல் அவசியமாகும். அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றபோது அந்த மாணவனைக் தட்டியெழுப்ப வேண்டும். பொதுவாக ஆரம்பக்கல்வியில் முதன்மைநிலை மூன்றில் (தரம் 05) கற்கும் மாணவர்களிடம் வாசித்தல், எழுதுதல் தொடர்பான இடர்பாடுகளே அதிகம் காணப்படும். இதனை நிவர்த்திக்கும் வகையில் சில செயற்பாடுகளை மேற்கொள்வதன் அவசியம் ஆசிரியர்களிடத்தில் உருவாகுமானால் அவர்களை மீட்டுக் கொள்ளலாம். பொதுவாக இவ்வாறு இடர்பாடுடைய மாணவர்களுக்கு இரண்டுவிதமான கற்பித்தல் முறையினை பயன்படுத்துதல் வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது. முழு வகுப்புக்கும் பயன்படுத்தக்கூடிய பொதுவான சில முறைகள் உள்ளன. மற்றயது அவ்வவ்போது இடர்பாடுகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு ஏற்றவிதமான வேறு முறைகளும் உள்ளன. அவற்றை வகுப்பறைக் கற்பித்தலுக்குப் புறம்பாக வேறொரு நேரத்தில் பயன்படுத்துதல் உசிதமானதாகும்.

கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்பதால் பிறிதொரு நேரத்தைத் தெரிவு செய்யலாம். முழு வகுப்புக்குமானதாக பயன்படுத்தக்கூடிய முறைகளும் இடர்பாடுகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கென பயன்படுத்த வேண்டிய முறைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

**5.2. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கு**

- ❖ மாணவருடன் உரையாடல்,பரிசீலித்துப் பார்த்தல், பரீட்சித்தல், அவதானித்தல்.
- ❖ ஆசிரியர் மாணவருடன் உரையாடலில் ஈடுபடும் போது மாணவரைப் பற்றிய படம் ஒன்றினை மனதில் உருவாக்கிக் கொள்ளல். மாணவரின் பிரச்சினையை இனங்காணுதல்.
- ❖ வகுப்பறையைச் சக்தி வாயந்த சுற்றாடலாக உருவாக்குதல் அல்லது மாற்றியமைத்தல்
- ❖ மாணவர்களை வாசிக்கவும், எழுதவும் தூண்டும் சுற்றாடலைத் திட்டமிட்ட முறையில் அமைத்துக்கொள்ளல்
- ❖ சுதந்திரமாக எழுத, வரைய ஏற்றவிதமான எழுது கருவிகள் உபகரணங்களை வழங்குதல்
- ❖ வகுப்பறைச் சுவர்களில் கதைப்படங்களை ஒழுங்கமைத்துக் காட்சிப்படுத்தல்
- ❖ தெரிவு செய்த பத்திரிகைச் செய்திகள்,துணுக்குகள் போன்றவற்றைச் சேகரித்து காட்சிப்படுத்துதல்
- ❖ மாணவர்களின் முழுப் பெயர்களையும் பட்டியற்படுத்திக் காட்சிப்படுத்தல் பட்டியற்படுத்திக் காட்சிப்படுத்துதல், மேலும் அவர்களினது சுய ஆக்கங்களைக் காட்சிப்படுத்தும்போது மாணவர்களின் பெயர்கள் எழுதப்படுதல் வேண்டும்
- ❖ மாணவர் தாம் விரும்பிய கருத்துக்களை எழுதி வெளியிட ஏற்றவகையில் கருத்துப்பெட்டி ஒன்றைத் தயார் செய்தல். அப்பெட்டியிலிருந்து சேகரிக்கப்படுகின்ற கருத்துக்களை வாரத்திற்கு ஒரு முறையாவது மாணவர்களை வாசிக்கச் செய்வதற்கு வழிப்படுத்தல்
- ❖ கொடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு ஏற்ப வகுப்பறையிலுள்ள மேசை, கதிரைகளை ஒழுங்கமைத்தல்
- ❖ வகுப்பறையிலுள்ள கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், சித்திரக்கதை நூல்கள், விந்தைமிகு செய்திகள், காட்டுன் துணுக்குகள் போன்றவற்றை மாணவர்கள் தாமாகவே தெரிவு செய்து வாசிக்கும் வகையில் ஒழுங்கமைத்தல்
- ❖ வகுப்பறையிலுள்ள தேவையற்ற பொருட்கள், அட்டைகள், மிகவும் பழைமையான பொருட்கள் போன்றவற்றை மாதம் ஒரு முறையேனும் அகற்றி புதிய பொருட்களை, ஆக்கங்களை, அட்டைகளை மீள வைத்து ஒழுங்கமைத்தல்
- ❖ குழுச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு ஏற்ற இடவசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்துதல். உதாரணமாக படங்கள் வரைவதற்கு, குழு விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு உரிய ஆக்கங்களில் ஈடுபடுவதற்கு வசதியளித்தல்
- ❖ ஒவ்வொரு பாடரீதியாகவும் முக்கியமானவற்றை காட்சியப்படுத்த இடம் ஒதுக்கிக் கொள்வதாகும்.

**5.3 மாணவர்களின் பரிகாரக் கற்பித்தல் செயற்பாட்டில் பெற்றோரின் பங்களிப்புக்கான ஆலோசனைகள்**

பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் பங்களிப்பு

1. மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் பங்களிப்பானது குறைவானதாகக் காணப்படுகின்றது.
2. பாடசாலையில் கற்பிப்பதை பெற்றோர்கள் வீட்டில் பிள்ளைகளுக்கு கற்பிப்பது குறைவானதாகக் காணப்படுகின்றது.

பிள்ளையானது தனது வாழ்வில் அதிகளவு நேரத்தை தமது வீட்டுச் சூழலிலே கழித்துக் கொள்கின்றனர். மாணவர்களின் கற்றலில் வீட்டுச் சூழலானது பெருமளவு பங்காற்றுகின்றது. பெற்றோரின் பங்களிப்பானது பிள்ளைகளுக்கு முழுமையானதாக கிடைக்கின்ற போது அவர்களின் கற்றலானது சிறப்பானதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.அந்த வகையில் பிள்ளைகளை கற்றலை மேற்கொள்வதற்கான பல சந்தர்ப்பங்களை பெற்றோர்கள் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். பிள்ளைகளை கற்றலில் ஊக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். பிள்ளைகளை மேலதிக வகுப்புகளுக்கு அனுப்புதல், அதுமட்டுமன்றி பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பித்துக் கொடுக்கும் விடயங்களை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு மீண்டும் கற்பித்தல் வேண்டும். அவர்களுக்கான மீள வலியுறுத்தல்களை கொடுத்தல் வேண்டும். கற்ற விடயங்களை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தல் வேண்டும். பிள்ளை பாடசாலையை விட்டு வந்ததும் அவர்களின் கொப்பிகளை ஒவ்வொரு நாளும் பார்வையிடுதல் வேண்டும். பிள்ளைகளின் கற்றலானது எந்தளவில் உள்ளது என்பதை அறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் பெற்றோர்கள் வீட்டில் முன்னெடுப்பதன் மூலமாக பிள்ளையின் மெல்லக் கற்றலில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.

**5.4 மாணவர்களுக்கான ஆலோசனைகள்**

1. மாணவர்கள் எழுதும்போது எழுத்துப் பிழையிட்டு எழுதுகின்றனர்.
2. எழுத்துக்களை உறுப்பமைய எழுதுவதில் மாணவர்களிடத்தில் சிரமங்கள் காணப்படுகின்றது.

ஆரம்பப்பிரிவு மாணவர்களிடத்தில் எழுத்துத்திறனில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. ஏனெனில் அவர்கள் எழுதுவதற்காக இவ்வகுப்புகளிலே ஆயத்தப்படுகின்ற நிலையானது காணணப்படுகின்றது. அதனால் அவர்களிடத்தில் எழுதும் போதும் இடர்பாடுகளை காணக்கூடியதாக உள்ளது. எழுத்துக்களை உறுப்பமைய எழுதாமை, குறியீடுகளை அனுசரித்து எழுதாமை, நேரத்துக்கு எழுதாமை, எழுத்துக்களை சரியாக எழுதாது எழுத்துப் பிழையிட்டு எழுதுதல் போன்ற இடர்களை ஆரம்பப்பிரிவு மாணவர்கள் எதிர்க்கொள்கின்றனர். எளிமையான பயிற்சியில் இருந்து சிறிது சிக்கலான பயிற்சிகளை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் நகர்ந்து செல்லும் வகையில் எழுத்துப் பயிற்சிகளை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும்.

எனவே இவ்வாறான இடர்பாடுகளைத் தடுக்கும் வகையில் இப்பருவத்திலேயே பிள்ளைகள் சரியான முறையில் எழுதுவதற்கு கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு வகுப்பறையில் ஆசிரியரின் கற்பித்தலானது மாணவரின் எழுத்தாற்றலைக் கருத்தில் கொண்டு இருத்தல் வேண்டும். புத்தகத்தில் உள்ள பந்தியொன்றை பார்த்து எழுத வைத்தல் இதன் மூலமாக பிள்ளை தனது எழுத்துக்களை உறுப்பமைய எழுதுவதற்கு கற்றுக்கொள்ளும். அதுமட்டுமன்றி எழுத்தட்டைகளைக் கொடுத்து அவற்றினை சொற்களாக்கும் பயிற்சிகளை ஆசிரியர்கள் வழங்குவதன் மூலமாக மாணவர்களின் எழுத்துத் திறனை விருத்தியாக்கிக் கொள்ள முடியும். இவ்வாறான செயற்பாடுகளை ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் முன்னெடுக்கின்ற போது மாணவர்களின் மொழித்திறனான எழுத்துத்திறனை மேம்படுத்த முடியும்.

**5.5 மாணவர்களின் மத்தியில் கிரகித்தல் திறன் விருத்தியின் குறைபாடுகள் சார்ந்த இடர்கள்**

ஆரம்பப்பிரிவு மாணவர்களிடத்தில் கிரகித்துக் கொள்ளும் தன்மையானது இல்லை என்றே கூறலாம். அதாவது ஆசிரியர்கள் - கூறுபவற்றை அவர்களால் கிரகித்துக் கொள்ள முடியாதவர்ககளாகக் காணப்படுகின்றனர். இதற்கு காரணம் கவனக்குறைவு என்றே கூறமுடியும். அதாவது ஆரம்பப்பிரிவு மாணவர்கள் மனதினை ஒரு நிலைப்படுத்தி கற்பிப்பவற்றை கேட்டுக் கொள்ளமாட்டார்கள். இதனால் அவர்களிடத்தில் கிரகிப்பு என்பது இல்லை எனலாம்.

இவ்வாறான கிரகித்தலில் மாணவர்கள் இடர்படுகின்ற வேளையில் அவர்கள் பாடத்தில் கவனம் செலுத்துகின்ற வகையில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடானது அமைய வேண்டும். கற்பிக்கின்ற விடயத்தை பிள்ளைகள் விளங்கிக் கொள்வதற்கு வகுப்பறையில் படங்களை தொங்கவிட்டு கற்பித்தலை மேற்கொள்ளலாம். அதுமட்டுமன்றி விளையாட்டுக்கள் மூலமான கற்பித்தலை மேற்கொள்வதன் மூலமாகவும் பிள்ளையின் கிரகித்தல் ஆற்றலை விருத்தியாக்கிக் கொள்ள முடியும். ஆரம்பப்பிரிவு மாணவர்களிடத்தில் கவனக் குறைவானது அதிகளவில் காணப்படும். ஏனெனில் அவர்கள் சிறுவயதினராகையால் அவர்களிடத்தில் விளையாட்டுத் தனமானது காணப்படுகின்ற பருவத்தினர் என்பதாகும். அதனால் அவர்களின் கவனத்தை சிதரவிடாத வகையில்

வகுப்பறையினை கற்பதற்குரிய கவின்நிலை உடையதாக மாற்றியமைக்க வேண்டியது ஆசிரியரின் கடடமையாகும். கற்பிப்பது அவர்களின் மனதில் இலகுவாகப் பதியும் வகையில் அவர்களிடத்தில் சிறந்த புலக்காட்சியை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடானது அமைய வேண்டும். இதனை வகுப்பறையில் ஆசிரியரின் செயற்பாடு மட்டும் ஏற்படுத்தாது இதற்கு வீட்டுச் சூழலின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாகும். அந்த வகையில் பிள்ளைகளிடத்தில் விடயங்களை செவிமடுத்துவற்கு ஊக்கப்படுத்தல், அவற்றின் மூலமாக தமது செயற்பாடுகளை கிரகித்து அவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கான பயிற்சிகளை ஆசிரியர்கள் வழங்கின்ற போது மாணவர்களின் கிரகித்தல் திறனை விருத்தியாக்கிக் கொள்ள முடியும்.

**5.6 ஆசிரியர் பெற்றோர் தொடர்சார்ந்த பங்களிப்பு**

1. பாடசாலையில் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமான தொடர்பானது குறைவானதாகக் காணப்படுகின்றது.
2. அதிபர்,ஆசிரியர்களின் கூறும் கற்றல் தொடர்பான ஆலோசனைகளைள உள்வாங்கி அதனை மாணவர்களின் கற்றலில் செயற்படுத்துகின்ற நிலையானது மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது.

பெற்றோர்களின் பங்களிப்பானது மாணவர்களின்கற்றலில் மட்டுமல்லாது ஆசிரியரின் கற்பித்தலிலும் பெற்றோர்களின் பங்களிப்பானது மிகவும் முக்கியமானதொன்றாகும். இதன் மூலமாக பிள்ளையின் கற்றலானது சிறப்பான தன்மையினை வெளிக்காட்டும். ஆசிரியர்கள் பெற்றோர்களிடையே சிறந்த தொடர்பு காணப்பட வேண்டும். அதன் போதுதான் பிள்ளையின் கற்றல் நிலை எவ்வாறானதாகக் காணப்படுகின்றது என்பதை பெற்றோர்கள் ஆசிரியர்களிடமிருந்து தெரிந்து கொள்வதற்கு ஆசிரியர் பெற்றோர் தொடர்பு மிகவும் முக்கியமானதாகும். ஆய்வு பிரதேசத்தில் இவ்வாறான நிலை குறைவாகவே காணப்படுகின்றன. காரணம் பிள்ளைகள் படித்தால் போதும். குறித்த வகுப்பு நிலையை அடைந்தால் மாத்திரம் போதும் என்ற சிந்தனை கொண்டிருக்கின்றனர்.

அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றலினை சிறப்பானதாக்குவதற்கு கூறுகின்ற விடயங்களை, ஆலோசனைகளை கேட்டு அவற்றை பிள்ளையின் கற்றலில் கடைபிடிக்க வேண்டும். மெல்ல கற்கும் மாணவர்களை வகுப்பு ரீதியில் இனங்கண்டு முறையான வழிகாட்டலை மேற்கொள்ள முன்வர வேண்டும். அவர்களின் ஆலோசனைகளை முழுமையாக செயற்படுத்துவதன் மூலமாக பிள்ளையின் கற்றலை சிறப்பானதாக்கிக் கொள்ள முடியும். எனவே ஆய்வினை பொறுத்தவரையில் பாடசாலை மாணவர்கள் கற்றலில் ஈடுபாடு குறைபாடாகவே காணப்படுகின்றது. அவை ஆசிரியர்கள், பெற்றோர்கள், அதிபர்களின் கருத்க்கள் ஊடாக புலனாகின்றது. எனவே கல்வி கற்ற நற்பிரஜைகளை உருவாக்கின்ற கடமையானது ஆசிரியர்களுக்குரியதாகும். இதனை ஆசிரியர்கள் கவனத்தில் கொண்டு தமது கற்பித்தலிலும் செயற்பாடுகளிலும் சேவை மனப்பான்மையுடன் ஈடுபட முன்வர வேண்டும்.

இன்று பாடசாலைகள் பிள்ளைநேய அணுகுமுறைகளை உட்படுத்தி மாணவர்களுக்கான கற்றல் சூழல் மாத்திரமன்றி பாடசாலையின் வெளிப்புறத்தினையும் அழகுபடுத்தி மாணவர்கள் விரும்புகின்ற இடமாக பாடசாலையை மாற்றியமைக்கும் திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற இன்றைய கால கட்டத்தில் சில வகுப்பறைகளில் எவ்விதமான கற்றல் உபகரணங்களோ, கற்பித்தல் உபகரணங்களோ இன்றி காணப்படுகின்றமை மாணவர்களை ஏமாற்றும் செயலாகவே மாணவர்களை ஏமாற்றும் செயலாகவே பார்க்கப்படுகின்றது. உண்மையில் சில மாணவர்கள் கற்றல் இடர்பாடுடையவர்களாக இருப்பினும் அதற்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்து தவிர்க்கப்படுவதானது பரிதாபத்திற்குரிய விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

எனவேதான் ஆசிரியர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்படுகின்ற மாணவர்களை சரியான முறையில் கற்றல் நிலைமைகளை அறிந்து குறைபாடுடைய பகுதிகளில் கற்றலை மேற்கொண்டு நிவர்த்திக்கச் செய்வது நலமாய் அமையும். இல்லையேல் மேற்கூறிய சமூகத்தின் பிரச்சினைக்குரிய மாணவர்களாக எதிர்காலத்தில் உருவாக்கப்படுவதை தவிர்க்கமுடியாமல் போய்விடும். இந்த விடயங்கள், பரிகாரம் சம்பந்தமான பூரணமான விளக்கங்கள் அனைத்தும் கல்வியமைச்சினால், மாகாணக் கல்வியமைச்சினால், யுனிசெப் மற்றும் ஜேர்மன் ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூல் போன்றவற்றிலும் காணப்படுகின்றன. இதனைக் கண்டறிந்து அவற்றினைக் கைகொள்வதன் ஊடாக வகுப்பறைகளில் கற்றலில் இடர்படுகின்ற மாணவர்களை இல்லாமல் செய்யலாம்.கிராம மட்டங்களில் காணப்படுகின்ற இப்பாடசாலைகளானது நகர்ப்புற பாடசாலைகளின் ஒத்துழைப்புடன் பல திட்டங்களை முன்னெடுத்து மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கூடிய கவனத்தை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

**6.0 சராம்சம்**

வறிய பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்ட பலாங்கொடை பகுதியில் கிராம மட்டத்தினை மையப்படுத்தியதான 05 பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் அடைவுமட்ட சார்ந்த கற்றல் முறையின் பின்னடைவானது பரிகாரக் கற்பித்தல் மூலம் நிவர்த்தி செய்யும் நோக்கில் அதன் தேவைப்பாடு, ஆய்வு

ரீதியான நோக்கம், பிரச்சினைகளை இனங்கண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளில் பரிகாரக் கற்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இம்முறையைப் பயன்படுத்துவதால் கற்றலில் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் மாணவர்களின் இடர்பாடுகளை களைந்து அவர்களின் தொடர்ச்சியான கற்றலுக்கு உதவ முடியும்.

பரிகாரக் கற்பித்தல்முறையை அபிவிருத்தியடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்க, ஜப்பான், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளான இலங்கை, இந்தியா போன்ற நாடுகளும் நடைமுறைப்படுத்தி வருகின்றன. குறிப்பாக இலங்கையில் மாகாண ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் காணப்படுகின்ற கல்வி செயற்பாடுகள், வளப்பகிர்வு, போன்ற வித்தியாசமாகவே காணப்படுகின்றன. அதேநேரம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மலையகத்தை பொருத்த மட்டில் இன்றும் பல பின்னடைவை நோக்கியதாகவே காணப்படுகின்றது. பரிகார கற்பித்தல் என்பது அவசியமான ஒன்றாகவே கருதப்படுகின்றது.

ஆகவே குறித்த ஆய்வானது குறித்த பகுதியில் காணப்பட்ட மெல்ல கற்கும் மாணவர்களின் பிரச்சினையை மையமாகக் கொண்டுள்ளதோடு தற்போது இவ்வாய்வு தொடர்பான பின்வரும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. அவையாவன கற்றல் தொடர்பான பிரச்சினைகள், மாணவர் இடைவிலகல், கற்றலில் வெறுப்பு, பொருளாதார பிரச்சினைகள், குடும்பம் மற்றும் சூழல் சார்ந்த காரணிகள், சகபாடிகளின் தவறான வழிநடத்தல்கள், பௌதீக வளங்கள் போன்றன இனங்காணப்பட்டுள்ளது. இவற்றுக்கான தீர்வும் இவ்வாய்வில் இடம்பெற்றுள்ளன.

எனவே மாணவர்களின் கற்றல் விருத்தியானது அவர்களின் கல்வியினை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானதாகும். ஆகையால் மாணவர்களின் மொழித்திறனை மிகவும் சிறப்பாக்கும் வகையில் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகள் அமைய வேண்டும். ஆசிரியர்களினது கற்பித்தலின் பங்களிப்பானது சிறப்பாக அமையும் போது மாணவர்களின் பரிகாரக் கற்றல் சார்ந்து மாறுபட்ட சிறந்த கற்றல் திறன்கள் வளர்வதோடு மாணவர்களின் கற்றல் சார்ந்த அறிவு விருத்தியடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**உசாத்துணைகள்**


1. அருள்மொழி, செ.(2010).பிள்ளை வளர்ச்சியும் கற்றலும், ராஜா புத்தக நிலையம், மட்டக்களப்பு.
2. அருள்மொழி, செ.(2008). கல்வி ஆய்வு முறைகள், எவகிறின் அச்சகம், மட்டக்களப்பு.
3. கருணாநிதி,மா. (2005). கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம்.
4. சின்னத்தம்பி, மா. (2008). கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள், சேமமடு புத்தகசாலை கொழும்பு.
5. சந்திரசேகரன், சோ. (1999) மலையக்கல்வி சில சிந்தனைகள், கவிதா பதிப்பகம், கொழும்பு.
6. இராஜேஸ்வரன், ப. உம் திருவாசகன், ந.(2003). கல்வியியலாளன், பலாலி வீதி கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
7. சந்திரசேகரம், சோ. (2004) கல்வி ஒரு பன்முக நோக்கு, உமா பதிப்பகம், கொழும்பு.
8. கருணாநிதி, மா. (2005) வாசிப்பு பழக்கத்தின் இன்றியமையாமை, ரொக்னோட பிரின்ட், கொழும்பு அகவிழி சஞ்சிகை
9. குணராசா, க. (1990), கிரகித்தல், நியூ செஞ்சரி புத்தக நிலையம்
10. https://steinhardt.nyu.edu/teachlearn/research/action/motivation
11. https://www.ets.org/Media/Research/pdf/RR-01-19-Wenglinsky.pdf